பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

10 10 2025 6 45

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உலகின் எந்தப் பகுதியிலும் தீவிரவாதத்தை எந்த வடிவிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

2. தமிழகத்தில் சாலைகளுக்கு பெயர்சூட்ட புதிய பெயர்ப் பட்டியலை மாநில அரசு வெளியிட வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

3. டெல்டா மாவட்டங்களில் நெல் கொள்முதலை துரிதப்படுத்த அதிகாரிகளைக் கொண்ட 21 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக உணவுத்துறை அமைச்சர் திரு. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

4. அஇஅதிமுக ஆட்சிக்கு வந்தால், கரூர் உயிரிழப்பு சம்பவம் தொடர்பாக முழுமையாக விசாரிக்கப்படும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

5. ஆர்க்டிக் ஓபன் பேட்மிண்டன் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் Dhruv Kapila - Tanisha Crasto இணை இன்று களமிறங்குகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>

உலகின் எந்தப் பகுதியிலும் தீவிரவாதத்தை எந்த வடிவிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், வரலாற்றுச் சிறப்பு மிக்க காஸா அமைதித் திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தியதற்காக, அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்-ஐ தொலைபேசியில் தொடர்புகொண்டு தமது பாராட்டை தெரிவித்ததாக கூறியுள்ளார்.

இந்த உரையாடலின்போது இந்தியா - அமெரிக்கா இடையிலான வர்த்தக பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் விவாதித்ததாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்று, இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாகுவையும் தொடர்புகொண்டு வாழ்த்தியதுடன், பிணைக் கைதிகளை விடுவிக்கவும், காஸா மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவிப் பொருட்களை வழங்கவும் ஒப்புக்கொண்டதற்காக, பாராட்டு தெரிவித்ததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<>>>

தமிழகத்தில் சாதிப் பெயர்களை நீக்குவதாகக் கூறி மாநிலம் முழுவதும் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் பெயர் சூட்டப்படுவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாணவர் விடுதியின் பெயர் சமூகநீதி விடுதிகள் என்று மாற்றப்படுவதும், அரசு ஆவணங்களில் இருந்து "காலனி" என்ற சொல் நீக்கப்படுவதாக கூறி இருப்பதும் வெற்று விளம்பரம் என்று குறிப்பிட்டுள்ளார்.

கடந்த நான்கரை ஆண்டுகளாக ஷெட்யூல்டு வகுப்பைச் சேர்ந்த மக்களுக்கு எதிரான அத்துமீறல்கள் அதிகரித்திருப்பதாக கூறியுள்ள மத்திய அமைச்சர், தமிழகத்தின் பல பகுதிகளில் தீண்டாமை, இரட்டைக்குவளை, இரட்டை சுடுகாடு, கோவில்களுக்குள் செல்ல முடியாத சூழல் நிலவுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இப்போது தெருக்கள் மற்றும் சாலைகளுக்கு வைக்கப்பட்டுள்ள சாதிப் பெயரை நீக்கிவிட்டு புதிதாக பெயர் சூட்டுவதற்கான பட்டியலில் விடுதலைப் போராட்ட வீரர்கள் தமிழ்மொழி மற்றும் பக்தியை வளர்க்க நாயன்மார்கள், ஆழ்வார்கள் பெயரோ, ராஜாஜி, எம்.ஜி.ஆர். ஜெயலலிதா போன்ற முன்னாள் முதலமைச்சர்களின் பெயர்கள் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

எனவே இது தொடர்பாக புதிய பட்டியலை தமிழக அரசு வெளியிட வேண்டும் என்றும் டாக்டர் எல். முருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>

தஞ்சாவூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் நெல் கொள்முதலை துரிதப்படுத்த அதிகாரிகளைக் கொண்ட 21 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக உணவுத்துறை அமைச்சர் திரு. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

தஞ்சையில் நெல் கொள்முதல் நிலையம் மற்றும் திறந்தவெளி சேமிப்புக் கிடங்குகளை ஆய்வு செய்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் கடந்த 60 ஆண்டுகளில் இல்லாத வகையில் குறுவை சாகுபடி அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கூறினார்.

<<<<>>>

தமிழகத்தில் உள்ள கிராமப் பகுதிகளில் வீடுகளுக்கு இணைய மற்றும் OTT சேவைகளை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் தெரிவித்துள்ளார்.

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இதனைத் தெரிவித்த அவர், மாநிலத்தில் உள்ள 11 ஆயிரத்து 800க்கும் அதிகமான கிராமப் பஞ்சாயத்துகள் கண்ணாடி இழை கம்பிவடம் வழியாக இணைக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

இத்திட்டத்திற்காக மாவட்ட வாரியாக தொழில் பங்கீட்டாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு குறைந்த செலவில் தரமான இணைய சேவை வழங்கப்பட இருப்பதாகவும் திரு. பழனிவேல் தியாகராஜன் தெரிவித்தார்.

<<<<>>>

அஇஅதிமுக ஆட்சிக்கு வந்தால், கரூர் உயிரிழப்பு சம்பவம் தொடர்பாக முழுமையாக விசாரிக்கப்பட்டு, தவறு செய்தவரக்ள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தொகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், இந்த விவகாரத்தில் திமுக அரசு திட்டமிட்டு நாடகமாடுவதாக குற்றம் சாட்டினார்.

மாநில அரசு அமைத்துள்ள விசாரணை ஆணையம் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனவே இதுகுறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தினார்.

<<<>>>

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை வட்டத்திற்குட்பட்ட எல்லை கிராமத்தில் பாம்பு கடித்து உயிரிழந்த விநாயகமூர்த்தியின் குடும்பத்தினருக்கு 3 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்க முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து முதலமைச்சர் தமது ஆழ்ந்த இரங்லையும் தெரிவித்துள்ளார்.

<<<>>>

நீலகிரி மாவட்டத்தில் ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட ஆய்வில் ஒளிராத வகையைச் சேர்ந்த இரு பூச்சியினங்கள் கண்டறியப்பட்டுள்ளது.

புதுச்சேரி பல்கலைக்கழகம், மும்பையைச் சேர்ந்த இயற்கை வரலாற்றுச் சங்கம் உள்ளிட்ட அமைப்புகள் கூட்டாக மேற்கொண்ட ஆராய்ச்சியில் இந்த மின் மினிப் பூச்சிகள் கண்டறியப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிகிறார்.

<<<<>>>

பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ, கஷ்மீரில் அமைதியை சீர்குலைக்கும் நோக்கில் லஷ்கரே தொய்பா, ஜெய்ஷே முகமது உள்ளிட்ட தீவிரவாத அமைப்புகளுக்கு தொடர்ந்து ஆதரவளித்து வருவதாக ஆய்வறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---------------

பங்களாதேஷில் கடந்த ஓராண்டு காலத்தில் நடைபெற்ற பல்வேறு தாக்குதல் சம்பவங்களில் 111 பேர் உயிரிழந்துள்ளனர்.

---------------

ரிசர்வ் வங்கியின் செயல் இயக்குநராக திரு. சஞ்சய் குமார் ஹன்ஸ்டா நியமிக்கப்பட்டுள்ளார்.

---------------

உத்தரப்பிரதேச மாநிலம் அயோத்தி மாவட்டத்தில் நேரிட்ட கட்டிட விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர்.

---------------

மதுரை மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் நடைபெற்ற கலைத் திருவிழா போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி. செழியன் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

---------------

திருவள்ளூர் மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாநில அமைச்சர் திரு. நாசர் தலைமையில் நடைபெற்றது.

---------------

ஈரோடு அருகே குடிமைப்பொருள் குற்றப் புலனாய்வு காவல்துறையினர் நடத்திய சோதனையில் ரேஷன் அரிசி கடத்திய இருவர் கைது செய்யப்பட்டனர்.

---------------

தருமபுரி மாவட்டம் மொரப்பூர் வனப்பகுதியில் மான் வேட்டையாட முயன்ற இருவருக்கு வனத்துறையினர் 3 லட்சம் ரூபாய் அபராதம் விதித்தனர்.

---------------

நெல்லை மாவட்டம் மேலத்திடியூர் பகுதியைச் சேர்ந்த கல்லூரி மாணவர் ஒருவருக்கு எலிக்காய்ச்சல் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

---------------

திருப்பத்தூர் மாவட்த்தில் சிறப்பாக பணியாற்றிய காவலர்களுக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி சியாமளா தேவி பரிசுகளை வழங்கினார்.

---------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஆர்க்டிக் ஓபன் பேட்மிண்டன் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் Dhruv Kapila - Tanisha Crasto இணை இன்று சீனாவின் Jiang Z - Wei இணையை எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டி ஃபின்லாந்தில் மாலை 6 மணிக்கு நடைபெறும்.

-------------

உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தென்னாப்பிரிக்கா, இந்திய அணியை 3 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது.

விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் களமிறங்கிய இந்தியா, 49 புள்ளி 5 ஓவரில் 251 ரன் எடுத்தது.

இதையடுத்து 252 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய தென்னாப்பிரிக்க அணி 7 விக்கெட் இழப்புகு 252 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

---------------

ஆசியக் கோப்பை கால்பந்து தகுதிச் சுற்றுப் போட்டியில் இந்தியா-சிங்கப்பூர் இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது. சிங்கப்பூரில் நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்தன.

<<<<>>>>